இருந்தாலும், அரசு கலைக் கல்லூரிகளைத் தொடங்குகிற செயற்குறிப்பு அரசாங்கத்திடம் ஏதும் இல்லை. தனியார் துறையிலே மகளிர் கல்லூரிகள் தொடங்கப்படுவதற்கு ஏதாவது செயற்குறிப்பு அனுப்பினால், கண்டிப்பாக இந்த அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, தனியார் பள்ளியிலே படிக்கின்றவர்களுக்கு Fees அதிகமாக இருக்கின்றது என்று கூறினார்கள். அங்கேயிருக்கின்ற அரசு பாலிடெக்னிக்குகளிலே ஒப்பளிக்கப்பட்ட 560 இடங்களிலே 145 இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 85, திரு. கே.வி. முரளிதரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

85—

கூட்டுறவு பட்டு நெசவாளர்கள் சங்கம்

***34624—திரு. கே.வி. முரளிதரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தெங்கனிக்கோட்டை வட்டம், கேளமங்கலத்தில் கூட்டுறவு பட்டு நெசவாளர் சங்கம் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அச்சங்கம் எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தெங்கனிக்கோட்டை வட்டம், கேளமங்கலத்தில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ)கேள்வி எழவில்லை.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் முதல் தடவை பேசுவது கன்னிப் பேச்சு என்று சொல்கிறார்கள். இது கன்னிக் கேள்வி. This is my first question. இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1971 ஆம் ஆண்டு பட்டு நெசவாளர்

2005 மார்ச் 7]

சங்கம் வாடகைக் கட்டடத்தில் தொடங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தது. சொந்தமாகக் கட்டடம் கட்ட, வங்கி மூலம் கடன் வாங்கி, பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. 25% கடன் வழங்கப்பட்டு, மீதம் 75% தொகை தாமதம் செய்யப்பட்டதால், Working Capital பணம் எடுத்து சங்கக் கட்டடப் பணி முடிக்கப்பட்டது. Working Capital பணம் எடுத்துக் கட்டடம் கட்டியதால், 75 சதவிகிதத் தொகையை வங்கி அதிகாரிகள் கொடுக்க மறுத்து விட்டனர். எனவே, Working Capital இல்லாமல் மூடப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தளி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதனாலும், இப்பகுதிகளில் தேச விரோத சக்திகள் ஊடுருவாமல், எல்லாத் துறைகளிலும் தளி தொகுதிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்று அறிவிக்கப்பட்டதற்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனால், இந்தத் துறையைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் கடனை ரத்துச் செய்து, மீண்டும் நெசவாளர் சங்கம் தொடங்க முன்வருவார்களா என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெங்கனிக்கோட்டை வட்டம், கேளமங்கலத்தில், அரசின் நிதியுதவியுடன் 30-1-1978 ஆம் தேதி பதிவு செய்யப்பட்டு, 26-4-1978 முதல் செயல்பட்டு வந்தது. கேளமங்கலம் பட்டு கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளுக்கு மேல் செயல்படாமல் இருந்ததாலும், உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் நிலை ஏற்பட்டதாலும், இந்தச் சங்கம், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983, பிரிவு 137(2)-இன்கீழ் 24-9-1997-ல் கலைக்கப்பட்டுவிட்டது. இப்பகுதியிலுள்ள நெசவாளர்கள் எவரேனும் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகப் பயன்பெற விரும்பினால், அருகிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகிப் பயன்பெறலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.வி. முரளிதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 86, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.